36 per cent interest is being charged by them and whereas they go to most of the unfortunate Government servants before the latter draw their salary on the first of every month and threaten them, what steps will this Government take to protect such kind of unfortunate Government servants?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இதைச் சீர்குலைக்கும் வகையில் ஒருசிலர் ஈடுபடுகிற முயற்சியில் பணம் வாங்குகின்றவர்களும் அவர்களோடு ஒத்துழைக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆனாலும் சரியாக நடந்து கொள்ளாதவர்கள் மீது அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். எஸ். மணி: பட்டாணியர்களுக்கு ஆறுமாதக் கடன்காரர்கள் என்று பெயர் இருக்கிறது. 100 ரூபாய் கடன் கொடுத்துவிட்டு 300 ரூபாய் கடன் வாங்கியதாக லெட்ஜரில் கணக்கு எழுதுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: லெட்ஜர் வைத்திருக்க வேண்டும், ரசீது வைத்திருக்கவேண்டும். இதிலே தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் 16 பட்டாணியர்கள் லைசென்ஸ் இல்லாமல் தொழில் நடத்தியதாகக் கேள்விப்பட்டு அதற்குத் தகுந்த நடவடிக்கையைக் கலெக்டர் அவர்கள் எடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். அவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மின்சார வரி குறைப்பு

* 308 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அனல் மின்சாரப் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு சமீபத்தில் தமிழக அரசு 10 சத மின்சார வரி ரத்து செய்ததா?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஆம். மின்சாரப் பகுதியிலுள்ள உயர்திறன் மின்சக்தி உபயோகிக்கும் தொழிற்சாலைகள் செலுத்தி வந்த 10 சதவிகிதம் வீதம் வரி 19—11—1969-லிருந்து நீக்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

* 293 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீல னையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டிலே பெரிய மாவட்டங்களில் ஒன்றாகவும், நிலவரி மிகுதியாக வசூலிக்கப்படும் மாவட்டமாகவும் உள்ள தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு இனியே னும் அரசு முயற்சிக்குமா? சென்னை ராஜ்யம் என்பது தமிழ்நாடு என்று வழங்கப்படுவதுபோல் தற்போதுள்ள மாவட்டங்களின் பெயர்களுக்குப் பதிலாக சோழ மாவட்டம், பாண்டிய மாவட்டம், பல்லவ மாவட்டம், கொங்கு மாவட்டம் என்று மாற்றப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பெரிய ஆபத்தாக இருக் கிறது. கிட்டப்பா அவர்கள் சோழ மாவட்டம் என்று சொன்னால் (திரு. பொன்னப்ப நாடார் அவர்களைச் சுட்டிக்காட்டி) இவர்கள் சோநாடு என்று சொல்லக்கூடிய நிலைமைக்குப் போய்விடும். பொதுவாக மாவட்டங்கள் நிர்வாகச் சௌகரியங்களுக்காகப் பிரிக் கப்படுகின்றன. இருபது பிளாக்குகள்தான் ஒரு மாவட்டத்தில் இருக்க வேண்டுமென்றும், 20 லட்சம் மக்களுக்கு ஒரு மாவட் டத்தை அமைக்கவேண்டுமென்றும் மாவட்ட நிர்வாகக் கமிட்டி பரிந்துரை செய்திருக்கிறது. இவை எல்லாம் சரித்திரபூர்வமான மாவட்டங்கள். சில மாவட்டங்கள் பிற்போக்கான நிலையில் இருக் கின்றன. சில மாவட்டங்கள் தொழில் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு புது மாவட்டங்கள் அமைக் கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை அப்படிப் பட்ட யோசனை எதுவும் இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு. கிட்டப்பா அவர் களுடைய கேள்வியின் முதல் பகுதி நிர்வாக வசதிக்காக தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுமா என்பது. பிறகு சோழ மாவட்டம் என்று அவர் சொல்லும்போது தஞ்சையையும் திருச்சி யையும் இணைக்கச் சொல்லுகிறாரா? இதில் எதை அரசு ஏற்றுக் கொள்வது என்று புரியவில்லை.

Inclusion of temporary service for pension.

* 291 Q.—THIRU N. S. V. CHITHAN : **Will the Hon. the Minister for Finance be pleased to state whether there are proposals under the consideration of the Government to include temporary service for pension to Government servants?**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நிலையான அல்லது தாற் காலிகப் பதவியில் அரசுப் பணியாளர் ஒருவர் ஆற்றிய தற்காலிகப் பணிக்கால அளவு முறைப்படியாக இருப்பினும் இராவிடினும் அதை ஊழியப்பூதியத்திற்குச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அனுமதித்து அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது.